ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2194/57 - 2020 සැප්තැම්බර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.09.24

*2194/57 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: DIVKW/LND/ACQA/4-D/36.
4-3/8/2017/PC/477.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், கடுகம்பொல ஹதபத்துவையில், யடிகஹ தெற்கு கோரளையில் 1158 ஆம் இலக்க, அஸ்ஸத்தும கிராம அலுவலர் பிரிவில், அஸ்ஸத்தும கிராமத்தில் அமைந்திருக்கும் இ. கி. வ - 976 இல் மேலதிக இல. 14, தாள் இல. 09 ஐயுமுடைய பின்வரும் காணித்துண்டின் விபரம் மற்றும் எல்லைகள் :

01. **துண்டு இல. 75 - காணியின் பெயர் : அம்பகஹமுல வத்த, தல்கஹமுலவத்த; விபரம் : வீட்டுத் தோட்டம், 35 - 40 வருடங்களையுடைய தென்னை மரங்கள் 12, 5 - 10 வருடங்களையுடைய தென்னை மரம் ஒன்று, 15 - 20 வருடங்களையுடைய கும்புக் மரம் ஒன்று, மாமரம் ஒன்று, நெல்லி மரம் ஒன்று, நிரந்தரக் கட்டிடம் ஒன்று, புத்தர் சிலையுடன் கூடிய வழிபாட்டுத் தளமொன்று, சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறொன்று மற்றும் நீர்த்தாங்கிகள் 2 என்பன உள்ளன. நிரந்தரக் கட்டிடம் ஆயுர்வேத திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது; உரிமை கோருபவர் : திரு. கே. ஜி. எஸ். பெரேரா, இல. 22, ஆனந்த மாவத்தை, குளியாப்பிட்டி; விஸ்தீரணம்: 0.1728 ஹெக்டயார்**

வடக்கு : 2F மற்றும் 8 ஆம் இலக்க காணித்துண்டுகள்; கிழக்கு : 8 மற்றும் 2E ஆம் இலக்க காணித்துண்டு; தெற்கு : 2E ஆம் இலக்க காணித்துண்டு; மேற்கு : 2G மற்றும் 2F ஆம் இலக்க காணித்துண்டுகள்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு குளியாப்பிட்டி மேற்கு பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின்

1A - G 32979 - 35 (2020/09)

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ. எம். ஏ. கே. திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்,
குளியாப்பிட்டி மேற்கு.

பிரதேச செயலகம்,
குளியாப்பிட்டி மேற்கு,
2020, செத்தெம்பர் 22.

10 - 339

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: வட/என்/எல்ஏ/டீஎஸ்.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2016/HA/368.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்** :

வட மாகாணத்தில், யாழ்பாணம் மாவட்டத்தில், வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், புலோலி மத்தி ஜே/409 கிராம அலுவலர் பிரிவில், கொற்றாவத்தை கிராமத்தில் அமைந்திருக்கும் ஆரம்ப வரைபட இல. பிபியா-2926 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் விபரம் :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : கொற்றாவத்தை; விபரம் : தோட்டம், நிரந்தரக் கட்டிடங்கள் 10, தற்காலிகக் கட்டிடங்கள் 04 மற்றும் கிணறு 01; உரிமைகோருபவர் : காணி கொள்வனவு சபை; விஸ்தீரணம் : 0.3376 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஆழ்வாப்பிள்ளை சிறி,
பிரதேச செயலாளர்,
பருத்தித்துறை.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை,
2020, யூன் 10.

10 - 340

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.